**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**O.S.No.179/2024**
**வழக்கு சாட்சி D.W.1**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.K.கார்த்திக் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : முனியம்மாள் | தொழில் | : திருப்பூர் பனியன் கம்பெனியில் வேலை |
| தகப்பனார் பெயர் | : சுப்பிரமணி | கணவர் பெயர் | : முருகானந்தம் |
| கிராமம் | : கே.செட்டிபாளையம் | வயது | : சுமார் 39 |
| தாலுக்கா | : திருப்பூர் | நாள் | : 09.02.2026 |
| மாவட்டம் | : திருப்பூர் | | |

<u>முதல் விசாரணை :</u>

திருப்பூர் மாவட்டம், திருப்பூர் டவுன், முத்தனம்பாளையம், கே.செட்டிபாளையம், வ.உ.சி.நகர் 1வது வீதி, 1/232A, மணி காம்பவுண்ட் என்ற விலாசத்தில் வசித்து வரும் முருகானந்தம் மனைவி இந்து சுமார் 39 வயதுள்ள முனியம்மாள் ஆகிய நான் சத்தியப்பிரமாணத்தின் பேரில் கூறும் முதன்மை சாட்சிய நிரூபண பிரமாண வாக்குமூலம்.

நான் இந்த வழக்கின் பிரதிவாதி ஆவேன். நான் இன்று தாக்கல் செய்திருக்கும் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் ஆகும். அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு, தயார் செய்யப்பட்டு, அவற்றை நன்கு படித்து புரிந்து கொண்டு கையெழுத்து செய்திருக்கிறேன். ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. இன்று நான் தாக்கல் செய்திருக்கும் முதன்மை சாட்சிய நிரூபண பிரமாண பத்திரிக்கையை ஏற்றுக் கொண்டு நீதிமன்றம் சரியென கருதும் உத்தரவை பிறப்பிக்க வேண்டுகிறேன்.

**<u>வாதி தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை</u>**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் ? 9–ம் வகுப்பு தேர்ச்சி பெற்றேன். 10–ம் வகுப்பு இடையில் நின்றுவிட்டேன். இந்த வழக்கின் வாதியை யார் என்று தெரியுமா என்றால் ? வாதியின் பெயர் விஜயராஜ். வழக்கு தாக்கல் செய்த பிறகு

தெரிந்து கொண்டேன். அதற்கு முன்பு தெரியாது. வாதியும், நானும் உறவினர்கள் என்றால் ? சரிதான். எத்தனை வருடமாக உறவினர்கள் என்றால் ? எனக்கு வாதியை உறவினர் என்று தெரியாது. பிரச்சனை ஏற்பட்ட போது தான் எனது பெரியப்பாவின் மருமகன் என்று தெரிந்து கொண்டேன். எனக்கும் வாதிக்கும், எந்தவிதமான சொத்து பிரச்சனை கிடையாது என்றால் ? இல்லை. எனது தகப்பனார் எங்கு குடியிருந்து வருகிறார் என்றால் ? திருப்பூரில் என்னோடு தான் குடியிருந்து வருகிறார். எனக்கு பாத்தியப்பட்ட சொத்து கோபாலபுரத்தில் உள்ளது என்றால் ? சரிதான். அந்த சொத்தை பராமரிப்பதற்கு நான் அந்த இடத்திற்கு சென்று வருவேன் என்றால் ? எனது அண்ணன் இருக்கும் வரை அவர் பராமரித்து வந்தார். அண்ணன் இறந்த பிறகு தான் நான் சென்று பார்த்து வருகிறேன். எனக்கு உறவினர்கள் கோபாலபுரம், விருப்பாட்சி, சத்திரப்பட்டி ஆகிய ஊர்களில் இருந்து வருகிறார்கள் என்றால் ? சத்திரப்பட்டியில் உள்ளார்கள். கோபாலபுரத்தில் உள்ளார்கள். நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை சங்கதிகளில் அ.வ.எண்.149/2010 என்ற வழக்கு பற்றி சொல்லியுள்ள நிலையில் மேற்படி வழக்கானது யார் யாருக்கு இடையே நடைபெற்றது என்றால் ? மேற்படி வழக்கானது எனது தகப்பனாருக்கும், எனது பெரியப்பாவிற்கும் நடைபெற்றது. அந்த வழக்கு எனது அப்பாவிற்கு தீர்ப்பாகிவிட்டது. நான் நீதிமன்றத்தில் பொய்யாக எதுவும் சொல்லவில்லை என்றால் ? சரிதான். என்னிடம் காட்டப்படும் அ.வ.எண்.149/2010 என்ற வழக்கு தான் தற்போது நான் மேலே சொன்ன வழக்கு என்றால் ? சரிதான். மேற்படி வழக்கானது 22.08.2014ம் தேதி தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் ? சரிதான்.

**அந்த தீர்ப்புரையின் கணினி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.3.**

(தொடர்ச்சியான குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH Date: 2026.02.09 15:15:37 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்